Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி


KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, அக்டோபர் 12, 2024 | இதழ் 182

## திருவள்ளூர் அருகே சரக்கு ரெயில் மீது பயணிகள் ரெயில் மோதி விபத்து: உயிர் சேதம் இல்லை

### 12 பெட்டிகள் தடம் புரண்டன பார்சல் பெட்டிகள் தீப்பிடித்து எரிந்தன



சென்னை, 12 அக் 2024: திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை அருகே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது பாக்மதி விரைவு ரயில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 19 பேர் காயமடைந்த நிலையில் அதிர்ஷ்டவசமாக உயிர் தேசம் ஏற்படவில்லை.

கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து பிஹார் மாநிலம் தர்பங்காவுக்கு சுமார் 2,000 பயணிகளுடன் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பாக்மதி அதிவிரைவு ரயில் புறப்பட்டது. இந்த ரயில் ஜோலார்பேட்டை, அரக்கோணம், பெரம்பூர் வழியாக கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் 90 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

இந்த ரயில் நேற்றிரவு 8.27 மணி அளவில், திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை ரயில் நிலையம் அருகே சென்று கொண்டிருந்தபோது, திடீரென அங்கு ஏற்கெனவே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது. இதில், அந்த ரயிலின் 12 பெட்டிகள் வரை தடம்புரண்டது. மேலும் ரயிலின் பார்சல் பெட்டியில் அடிப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது.

இது குறித்து ரயில்வே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலின் பேரில் ரயில்வே அதிகாரிகள், திருவள்ளூர் மாவட்ட அரசு அதிகாரிகள், ரயில்வே போலீஸார், ஆர்.பி.எஃப். போலீஸார், பேரிடர் மீட்பு குழுவினர் அங்கு விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில், அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. அதேநேரத்தில் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர். பயணிகள் சிறு காயங்களுடன் தப்பித்த நிலையில் நல்வாய்ப்பாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இதற்கிடையில், கவரைப்பேட்டை அருகே திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த பயணிகளை பேருந்துகள் மூலமாக, பொன்னேரி நிலையத்துக்கு அழைத்து வந்தனர். அங்கிருந்து இரண்டு மின்சார ரயில்கள் மூலமாக சென்ட்ரலுக்கு அழைத்து வந்தனர். தொடர்ந்து, சென்டரல் ரயில் நிலையத்தில் இருந்து சனிக்கிழமை அதிகாலை இந்த பயணிகளை சிறப்பு ரயிலில் தர்பங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் கூறியதாவது: கவரப்பேட்டையில் சரக்கு ரயில் மீது பயணிகள் ரயில் மோதியதில் சரக்கு ரயிலில் 2 பெட்டிகள் எரிந்தன. பயணிகள் ரயிலில் 6 பெட்டிகள் தடம் புரண்டன. முதல்வரின் உத்தரவின்பேரில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டு காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் துரிதமாக செயல்பட்டு பயணிகளை மீட்டனர். ரயிலில் இருந்த 1360 பயணிகளும் பத்திரமாக மீட்டகப்பட்டனர். இதில் 19 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அதில் 3 பேருக்கு மட்டும் அதிக காயம் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். திருமண மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பயணிகளுக்கு சமையல் செய்யப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக குடிநீர், பிஸ்கட், பிரட் போன்றவை வழங்கபட்டுள்ளது. நல்வாய்ப்பாக விபத்தில் உயிரிழப்பில்லை என ஆட்சியர் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த 5 உயரதிகாரிகளை கொண்ட குழுவை தெற்கு ரயில்வே அமைத்துள்ளது. இதில் இயந்திரவியல், இயக்கவியல், தண்டவாள பராமரிப்பு துறை, சிக்னல் மற்றும் தொலைதொடர்பு, ரயில்வே பாதுகாப்பு பிரிவு ஆகிய துறைகளை சேர்ந்த உயரதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். விபத்துக்கு சிக்னல் தொழில் நுட்ப பிரச்னையா அல்லது மனித தவறா, வேறு ஏதும் காரணமா என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்க உள்ளனர். மேலும், ரயில்வே போலீஸாரும் வழக்குப் பதிந்து, விசாரணையை தொடங்கி உள்ளனர்.

இதைத் தொடர்ந்து, இரு மார்க்கமாகவும் ரயில் சேவை நிறுத்தப்பட்டது. இந்நிலையில், 8 ரயில்கள் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டும், 2 ரயில்களை ரத்து செய்தும் உள்ளது.

இந்த ரயில் கவரைப்பேட்டை ரயில் நிலையம் அருகே வருவதற்காக பிரதான பாதையில் வருவதற்காக, பச்சை நிற சிக்னல் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அருகே வந்தபோது, மிகப்பெரிய அதிர்வு ஏற்பட்டு, கிளை பாதையில் (லுப் லைனில்) சென்று, அங்கு நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலில் மோதி விபத்துக்குள்ளனதாக ரயில்வே வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உதவி எண்: இந்த ரயிலில் சென்ற பயணிகள் தொடர்பாக தகவல் விவரம் அறியும் விதமாக, உதவி எண்ணை( 044-25354151, 044-2435499) ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

## நடுவானில் விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு; திறனுடன் தரையிறக்கி 141 பயணிகளின் உயிரை காத்த விமானி



சென்னை, 12 அக் 2024: திருச்சியில் இருந்து ஷார்ஜாவுக்கு நேற்று மாலை புறப்பட்ட விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து எரிபொருள் தீரும் வரை வானில் வட்டமடித்து மீண்டும் திருச்சி விமான நிலையத்தில் பத்திரமான தரையிறக்கி 141 ப தரையிறக்கப்பட்டது.

இந்நிலையில், விமானிக்கு பலரும் வாழ்த்து தெரிவித்த வண்ணம் உள்ளனர். இந்த விமானத்தில் 141 பயணிகள் இருந்தனர். முதல்வர் ஸ்டாலின், ஆளுநர் ஆர்.என்.ரவி மற்றும் மக்கள் விமானிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஏர் இந்தியா விமானம் (எண்: வீஜ்613), இரண்டு விமானிகள், ஆறு பணி பெண்கள் மற்றும் 141 பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை 5.40 மணிக்கு புறப்பட்டது.

186 இருக்கைகள் கொண்ட போயிங் 737-800 ரக இந்த விமானம் ரன்வேயில் இருந்து மேல் எழும்பிய நிலையில், அதன் சக்கரங்கள் உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், இந்த விமானத்தின் சக்கரங்கள் உள்ளே செல்லவில்லை. இதனால், அதனை மீண்டும் திருச்சி விமான நிலையத்தில் தரையிறக்குவது என முடிவு செய்யப்பட்டது.

விமானத்தின் எரிபொருள் தீரும் வரை வானில் வட்டமடித்து விட்டு அதன் பின்னர், தரையிறக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதனால், விமானம் தொடர்ந்து வானத்திலேயே வட்டமடித்து கொண்டு இருந்தது. இதனிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 10-க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்களும், 4 தீயணைப்பு வாகனங்களும் திருச்சி விமான நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டன. விமானம் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக திருச்சி, புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மாலை 5.45 மணி முதல் இரவு 8.10 மணி வரை 26 முறை வானில் வட்டமடித்து கொண்டிருந்தது. தகவலறிந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தொழில்நுட்ப வல்லுனர்களும், விமானிகள் மூலமே அப்பிரச்சினையை சரி செய்ய முயன்றும் முடியவில்லை.

இந்த தகவல் விமானத்தில் பயணம் செய்யும் பயணிகளை வழியனுப்ப வந்தவர்களுக்கு தெரிந்ததும், அவர்கள் விமான நிலையத்தில் அதிகாரிகளிடம் நிலைமை குறித்து பதட்டமாக விசாரித்த வண்ணம் இருந்தனர். இந்நிலையில், சக்கரம் விமானத்துக்கு வெளியே நீட்டிக் கொண்டிருப்பதால், விமானத்தை தரையிறங்குவதில் சிக்கல் இருக்காது என்று விமானிகள் திட்டமிட்டனர். கட்டுப்பாட்டு அறையில் இருந்தும் ஆலோசனை வழங்கப்பட்டது.

விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்குவது குறித்து திருச்சி விமான நிலைய இயக்குநர் கோபாலகிருஷ்ணன் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார் காற்று வீசும் திசைக்கு எதிர் திசையில் விமானத்தை தரையிறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்தச் சூழலில், விமான பயணிகளிடம் தொழில்நுட்ப கோளாறு குறித்து அறிவிக்கப்பட்டது.

மேலும், விரைவில் திருச்சியில் விமானம் மீண்டும் தரையிறங்குகிறது என்றும் அறிவிக்கப்பட்டது. இதனால் விமான பயணிகள் பீதி அடைந்தனர். இதே நேரத்தில் விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்க அனைத்து ஏற்பாடுகளையும், விமான நிலைய அதிகாரிகள், பாதுகாப்பு படை வீரர்கள், உள்ளூர் போலீஸார் உள்ளிட்டோர் செய்தனர். 10க்கும மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. 18 ஆம்புலன்ஸ்கள், 20 டாக்டர்கள், 100க்கும் மேற்பட்ட மருத்துவ பணியாளர்கள் அடங்கிய குழுவினரும் விமான நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். தொடர்ந்து இரவு, 8.10 மணி வரை விமானம் வானில் பறந்தபடி இருந்ததால், பயணிகளின் உறவினர்கள் திக்..திக் என்ற பீதியில் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதன் பின்னர் விமானம் இரவு 8.15 மணியளவில் பாதுகாப்பாக தரையிறங்கியது. விமானத்தில் இருந்த 144 பேரின் உயிரை காப்பாற்றிய விமானிகள் குழுவுக்கு தற்போது பாராட்டுகள் குவிந்து வருகின்றன. விமானி இக்ரம் ரிபத்லி, சக விமானிகள் மைத்ரி □□ரீகிருஷ்ணா, லைஷ்ராம் சஞ்சிதா தேவி, வைஷ்ணவி சுனில் நிம்பல்கர், சுஷி சிங் மற்றும் சாகேத் திலிப் வதனா ஆகியோர் கொண்ட குழுவினர், பயணிகளிடம் அச்சத்தை வெளிப்படுத்தாமல் தங்களுக்குள்ளாகவே பேசி திட்டமிட்டு விமானத்தை பத்திரமாக தரையிறக்கியுள்ளனர். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக வானத்தில் வட்டமிட்டபோது கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பில் இருந்த விமானிகள் குழுவினர், சாதுர்யமாக செயல்பட்டு விமானத்தை தரையிறக்கினர்.

விமானம் தரையிறங்கியபோது திருச்சி விமான நிலையத்தில் கூடியிருந்த பயணிகளின் உறவினர்கள், விமான பயணிகள் உள்ளிட்ட அனைவரும் கரகோஷங்களை எழுப்பி தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

மேலும், விமானத்தை பத்திரமாக தரையிறக்கிய விமானிகள் குழுவுக்கு சமூக வலைதளங்களில் பலர் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

முதல்வர் ஸ்டாலின், ஆளுநர் ஆர்.என்.ரவி, எடப்பாடி பழனிசாமி

மற்றும் மக்கள் விமானிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்தது: "ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியதை அறிந்து நிம்மதி அடைந்தேன். தரையிறங்குவதில் சிக்கல் என்ற தகவல் கிடைத்ததும், அலுவலர்களுடன் உடனடியாக தொலைபேசி வாயிலாக அவசரக் கூட்டத்தைக் கூட்டி, தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவ உதவிகள் எனத் தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தயார் நிலையில் வைத்திட அறுவுறுத்தி இருந்தேன்.

பயணிகள் அனைவரும் தொடர்ந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யவும், அவர்களுக்கு மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளை வழங்கவும் மாவட்ட ஆட்சியரிடம் தற்போது கூறியுள்ளேன்.

பாதுகாப்பாக விமானத்தை தரையிறக்கிய விமானி மற்றும் விமானக் குழுவினருக்கும் எனது பாராட்டுகள்!" என அதில் தெரிவித்திருந்தார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

திருச்சியில் இருந்து ஷார்ஜாவிற்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், தொழில்நுட்பக் கோளாறால் கடந்த சில மணி நேரங்களாக திருச்சி விமான நிலையத்தைச் சுற்றிய வட்டமடித்துக் கொண்டிருந்த நிலையில், தற்போது பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டுள்ளது; பயணிகள் அனைவரும் நலமாக உள்ளனர் என்ற செய்தி கேட்டு மிகுந்த மகிழ்ச்சியுற்றேன். கடுமையான சமயத்தில் திறம்பட செயல்பட்டு அனைத்து பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றிய விமானிகளுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள். எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சுமார் ஆறு மணி நேர தாமதத்துக்கு பிறகு வேறொரு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் பயணிகள் ஷார்ஜா புறப்பட்டனர். அதில் 108 பயணிகள் பயணித்தனர். 36 பயணிகள் அச்சம் காரணமாக பயணத்தை தவிர்த்து விட்டனர் என்ற தகவல் கிடைத்துள்ளது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

# அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக புலம் பெயர்ந்தவர்கள் காட்டுமிராண்டிகள், விலங்குகள் - டொனால்ட் டிரம்ப்

சென்னை, 12 அக் 2024: அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்களை காட்டு மிராண்டிகள், விலங்குகள் என முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் வசை பாடியுள்ளார்.

அமெரிக்காவில் நவம்பர் 5 ந்தேதி அதிபர் தேர்தல் நடக்க உள்ளது. தன்னை எதிர்த்து போட்டியிடும் கமலா ஹாரிசை, டொனால்டு டிரம்ப் கடுமையாக சாடி வருகிறார். அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றம் முக்கிய பிரச்சினையாக கருதப்படுகிறது.

இந்நிலையில், அரோராவில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் டிரம்ப் பேசும்போது, அதிபர் ஜோ பைடன் ஆட்சியில் சட்டவிரோத குடியேற்றம் அதிகரித்துள்ளது. இதனை, துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஆதரிக்கிறார். அவர் ஒரு குற்றவாளி. சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்கள் காட்டுமிராண்டிகள், விலங்குகள் போன்றவர்கள்.

அமெரிக்க குடிமகன் அல்லது சட்ட அமலாக்க அதிகாரியை கொல்லும் புலம்பெயர்ந்தோருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும். சட்டவிரோதமாக குடியேறியவர்களை எங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றுவோம். நவம்பர் 5 ந்தேதி நடக்க உள்ள அமெரிக்கத் தேர்தலில், நான் வெற்றி பெற்றால், சட்டவிரோத குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவேன் எனவும் டிரம்ப் பேசினார்.

# சகாரா பாலைவனத்தில் பெய்த கன மழையால் 50 ஆண்டுகளில் முதல் முறையாக வெள்ளப்பெருக்கு

சென்னை, 12 அக் 2024: சகாரா பாலைவனத்தில் பெய்த கன மழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் சகாரா பாலைவனப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்க கண்டத்தில் மொராக்கோவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சகாரா பாலைவனம் தான் உலகின் மிகவும் வறண்ட பாலைவனமாகும். பல விஷம் மிகுந்த ஊர்வன உயிரினங்களைக் கொண்டது இப்பாலைவனம். சகாராவில் மழை வெள்ளம் என்பது மிகவும் அரிதான ஒரு விஷயம் ஆகும். அந்த வகையில் அண்மையில் அங்கு பெய்த திடீர் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது, ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை ஓரிரு நாட்களில் பெய்ததால் சகாரா பாலைவனத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இந்த திடீர் கனமழையால் சகாரா பாலைவனத்தில் உள்ள இரிக்கி என்ற வறண்ட ஏரியில் நீர் நிரம்பியுள்ளது. சகாராவில் ஜகோரா டாடா மணல் படுகைகளுக்கு இடையே உள்ளது. இந்நிலையில் திடீர் மழை வெள்ளத்தால் நிரம்பிய இரிக்கி ஏரியின் காட்சிகள் கொண்ட புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

இது குறித்து மொராக்கோ நாட்டு வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "குறைந்த நேரத்தில் இவ்வளவு மழைப்பொழிவு பதிவாகி 30 முதல் 50 ஆண்டு காலம் ஆகிவிட்டது. தலைநகர் ரபாட்டாவில் இருந்து 450 கிமீ தொலைவில் உள்ள டாகோயுனைட் கிராமத்தில் பெய்த கனமழையால் இந்த வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அங்கு 24 மணி நேரத்தில் 10 செ.மீ. மழை பதிவாகியுள்ளது" என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வாளர் ஒருவர் கூறுகையில், "வெப்ப மண்டல சூறாவளியால் இந்த மழைப் பொழிவு ஏற்பட்டுள்ளது. இது அப்பகுதியின் வானிலையில் நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இப்பகுதியில் நிலவும் காற்றில் வழக்கத்தைவிட அதிகமாக ஈரப்பதம் இருப்பதால் இது மேலும் நீர் ஆவியாவதை ஊக்குவித்து சில புயல்களை உருவாக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

# வங்கக்கடலில் நாளை மறுநாள் புதிய காற்றழுத்த தாழ்வு உருவாகிறது

சென்னை, 12 அக் 2024: வங்கக்கடலில் வருகிற 14ம் தேதி புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகவுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில் தற்போது வளிமண்டல சுழற்சி நிலவி வருகிறது. இது தீவிரமடைந்து வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாக உள்ளது. வருகிற 14 ம் தேதி உருவாக வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இது தீவிரமடைந்து பின்னர் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறும் என இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென் தமிழகம் மற்றும் தென் மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் நிலவுகின்றன.

இன்று முதல் 16 ந்தேதி வரை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று கோவை, நீலகிரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. நாளை திருப்பூர் மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

14 ந்தேதி விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

15 ந்தேதி செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

16 ந்தேதி வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

17 மற்றும் 18 ந்தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரில் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வங்கக்கடலில் 12 ந்தேதி முதல் 16 ந்தேதி வரை தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு வருமாறு:

காரைக்குடி 15 செ.மீ, திருச்சி 13 செ.மீ., குருந்தன்கோடு 10 செ.மீ, குளச்சல், நெய்யூர் தலா 9 செ.மீ, ஈரோடு, வரட்டுப்பள்ளம், இரணியல், கடம்பூர் தலா 7 செ.மீ, அடையாமடை, எடப்பாடி, ஒரத்தநாடு, கொடைக்கானல், சோலையார், அம்மாபேட்டை, வத்திராயிருப்பு, திற்பரப்பு, தக்கலை, தீர்த்தாண்டதானம் தலா 6 செ.மீ, கொடைக்கானல், முள்ளங்கினாவிளை, காரியாப்பட்டி, சிவகங்கை, கோடநாடு, திருச்சி சந்திப்பு, சின்னகல்கல்லார், வால்பாறை, பேச்சிப்பாறை, மடத்துக்குளம் தலா 5 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

# முரசொலி செல்வம் உடலுக்கு அரசியல் கட்சித்தலைவர்கள் அஞ்சலி கதறி அழுத முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, 12 அக் 2024: முரசொலி செல்வம் உடலுக்கு திருமாவளவன், கீ. வீரமணி உள்ளிட்ட அரசியல் கட்சித்தலைவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அவரின் உடல் இன்று மாலை சென்னை பெசன்ட் நகர் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட உள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மருமகனும் முரசொலி நாளிதழின் முன்னாள் ஆசிரியருமான 'முரசொலி' செல்வம் (83), பெங்களூரில் நேற்று காலமானார். பின்னர், அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் அவரது உடல் சென்னை கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதி இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டது. முரசொலி செல்வத்தின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், முரசொலி செல்வத்தின் உடல் மீது சிறிது நேரம் தலையை சாய்த்தபடி கதறி அழுது கண்ணீர் விட்டார். அதன் பின்னர் தனது சகோதரி செல்விக்கு ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், துரைமுருகன், பொன்முடி, பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர்கள், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, தயாநிதி மாறன், சபாநாயகர் அப்பாவு மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

முரசொலி செல்வத்தின் உடலுக்கு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா, துணை செயலாளர் சுதீஷ், மதிமுக தலைமைக் கழக செயலாளர்

துரை வைகோ, கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் சார்பில் ஈ.ஆர். ஈஸ்வரன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், புதிய நீதி கட்சியின் தலைவர் ஏ.சி. சண்முகம், கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி, மனித நேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, இந்திய முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொய்தீன், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் எம்.எல்.ஏ., ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வசீகரன், கவிஞர் வைரமுத்து, டைரக்டர்கள் எஸ்.ஏ. சந்திரசேகர், பி.வாசு, நடிகர்கள் சத்யராஜ், சரத்குமார், வாகை சந்திரசேகர், விஜயகுமார், பார்த்தீபன், ராஜேஷ், பிரசாந்த், சிவாஜி கணேசனின் குடும்பத்தினர், பாடகர் சீர்காழி சிவசிதம்பரம், நடிகர் விஜய்யின் மனைவி சங்கீதா, நடிகர் விக்ரம் மனைவி ஷைலஜா, நடிகைகள் ராதிகா, ஸ்ரீ பிரியா, எஸ்.ஆர்.எம்.யூ. பொதுச்செயலாளர் கண்ணையா, விஜிபி குழுமங்களின் தலைவர் வி.ஜி.சந்தோசம், வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் வேந்தர் விஸ்வநாதன், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன் குமார், கவிஞர் மனுஷ்ய புத்திரன், முகசீரமைப்பு மற்றும் பல் மருத்துவர் பாலாஜி, பேராயர் வின்சென்ட் சின்னதுரை, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், முதலமைச்சரின் செயலாளர்கள், அரசு துறைச் செயலாளர்கள் சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தி,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

முரசொலி செல்வத்தின் இறுதி சடங்கு இன்று மாலை 4 மணிக்கு சென்னை பெசன்ட்நகர் மின் மயானத்தில் நடக்கிறது.

முன்னாள் முதல்வரான கருணாநிதியின் சகோதரி மகனான செல்வம், திரைப்பட தயாரிப்புத் துறையிலும் முத்திரை பதித்தவர். மேகலா பிக்சர்ஸ், அஞ்சுகம் பிக்சர்ஸ், பூம்புகார் புரொடக்ஷன்ஸ் ஆகிய திரைப்பட தயாரிப்பு நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தார். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் சகோதரி சண்முகசுந்தரம்மாளின் மகனான முரசொலி செல்வம், தனது மாமாவின் (கருணாநிதி) மகளான செல்வியை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு எழிலரசி என்ற மகள் உள்ளார்.

# முரசொலிக்கு நள்ளிரவில் கடைசியாக முரசொலி செல்வம் எழுதிய கேள்வி-பதில்



சென்னை, 12 அக் 2024: திமுக கொள்கை தூணாக விளங்கிய முரசொலி செல்வம் உடலுக்கு இன்று மாலை இறுதி சடங்குகள் நடைபெறவுள்ள நிலையில், முரசொலி நாளிதழுக்கு இவர் கடைசியாக எழுதிய கேள்வி பதில் பெரிதும் கவனம் பெற்றுள்ளது.

கலைஞர் கருணாநிதியின் சகோதரி சண்முக சுந்தரத்தம்மாளின் இளைய மகனும், கலைஞரின் மருமகனுமாகிய முரசொலி செல்வம் உடல்நலக் குறைவால் நேற்று காலமானார். இதையடுத்து அவரது உடல் பெங்களூருவில் உள்ள இல்லத்தில் இருந்து சென்னை கோபாலபுரத்திற்கு கொண்டு வரப்பட்டது. தலைவர்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இன்று மாலை 4.30 மணிக்கு இறுதி ஊர்வலம் நடைபெறுகிறது.

முரசொலி செல்வத்தின் மறைவு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை பெரிதும் பாதித்துள்ளது. அவரது உடலை நேரில் கண்டதும் கண்ணீர் விட்டு கதறினார். இதையடுத்து தன்னுடைய இரங்கல் செய்தியில், முரசொலி செல்வம் மறைந்த செய்தி என் இதயத்தை இடிபோல் தாக்கியது. சிறுவயது முதலே அண்ணனாக, வழிகாட்டியாக, இயக்க பணிகளில் ஆலோசனைகள் வழங்கி நெருக்கடி நேரங்களில் தெளிவான தீர்வுகளை முன்வைத்து கழகத்துடனான வளர்ச்சியில் தோளோடு தோள் நின்றவர். கலைஞர் நம்மை விட்டு பிரிந்த பிறகு நான் சாய்வதற்கு கிடைத்த கடைசி தோளை கொள்கை தூணை இழந்து நிற்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், முரசொலி நாளிதழுக்கு நேற்று முன் தினம் (அக்டோபர் 9) நள்ளிரவில் தன் கைப்பட 'ஒரு கேள்வி ஒரு பதில்' என்ற பெயரில் பெட்டி செய்தி ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார். அதில்,

கேள்வி: அரசு நிகழ்ச்சிகளுக்கு திமுக சின்னம் பொறித்த டிசர்ட் அணிந்து துணை முதலமைச்சர் கலந்து கொண்டு மரபு மீறி செயல்படுவதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளாரே?

பதில்: கருப்பு, வெள்ளை, சிகப்பு பார்டர் பொறித்த கட்சி சின்ன கரை வேட்டிகளை அணிந்து கொண்டு அவருடைய கட்சி தலைவர் எம்.ஜி.ஆர் முதல் எடப்பாடி பழனிசாமி வரை முதலமைச்சர்களாக பல அரசு விழாக்களில் கலந்து கொண்டதும் மரபு மீறலா? உத்தரப் பிரதேச மாநிலத்தில் காவி உடையிலேயே ஒரு முதலமைச்சர் உலா வருகிறாரா? அது எத்தகைய செயல்? விளக்குவாரா ஜெயக்குமார்?

இவ்வாறு எழுதி முரசொலிக்கு அனுப்பியுள்ளார். இது நேற்று முரசொலியில் 3 ஆம் பக்கத்தில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## அங்கம்மாள் என்ற திரைப்படமாக மாறிய எழுத்தாளர் பெருமாள் முருகனின் 'கோடித்துணி' சிறுகதை! அங்கம்மாள் படம் மும்பை திரைப்பட விழாவில் (எம் ஏ எம் ஐ) அதிகாரப்பூர்வமாக தேர்வு



சென்னை, 12 அக் 2024: பிரபல எழுத்தாளர் பெருமாள் முருகன் எழுதிய 'கோடித்துணி' என்கின்ற சிறுகதையை தழுவி எடுக்கப்பட்ட திரைப்படம் "அங்கம்மாள்". இப்படம் மும்பை திரைப்பட விழாவில் (எம் ஏ எம் ஐ) தெற்காசிய பிரிவின் கீழ் திரையிட அதிகாரப்பூர்வமாக தேர்வாகியுள்ளது. பெருமாள் முருகன் எழுதிய சிறுகதைகளில் ஒன்று திரைப்படமாக மாறுவதும், அது குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தை பெறுவதும் இதுதான் முதன்முறை. விபின் ராதாகிருஷ்ணன் இயக்கியுள்ள அங்கம்மாள் படத்தை என்ஜாய் பிலிம்ஸ் சார்பில் நடிகரும் பாடகருமான பிரோஸ் ரஹீம் மற்றும் அஞ்சாய் சாமுவேல் ஆகியோர் தயாரித்துள்ளார். படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரும் ஒளிப்பதிவாளருமான அஞ்சாய் சாமுவேல் இந்தப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். பெருமாள் முருகனின் 'கோடித்துணிக்கு புதிய உருவத்தை தரும் விதமாக அங்கம்மாள் உருவாகியுள்ளது.

நடிகர்கள்: கீதா கைலாசம், சரண், பரணி, தென்றல் ரகுநந்தன், முல்லையரசி, பேபி யாஸ்மின் மற்றும் பலர், தொழில்நுட்பக் குழுவினர் விவரம், தயாரிப்பு ; என்ஜாய் பிலிம்ஸ், தயாரிப்பாளர்கள் ; பிரோஸ் ரஹீம் மற்றும் அஞ்சாய் சாமுவேல், இணை தயாரிப்பாளர்கள் ; சம்சுதீன் காலித், அனு ஆப்ரஹாம், ஈஎல் விஜின் வின்சென்ட் பீப்பி, நிர்வாக தயாரிப்பு: அசாந்த் ராஜ் , கீர்த்தி நிபு, நிர்வாக மேலாளர்: பிரவின் வாமாராஜன் கதை ; பெருமாள் முருகன், திரைக்கதை & இயக்கம் ; விபின் ராதாகிருஷ்ணன், ஒளிப்பதிவு ; அஞ்சாய் சாமுவேல், இசை மற்றும் பின்னணி இசை ; முகம்மது மக்பூல் மன்சூர், படத்தொகுப்பு ; பிரதீப் சங்கர், கலை இயக்குநர் ; கோபி கருணாநிதி, ஒலிக்கலவை ; டி.கிருஷ்ணன் உன்னி (தேசிய விருது பெற்றவர்), ஆடை வடிவமைப்பு ; தன்யா பாலகிருஷ்ணன் (மாநில அரசு விருது பெற்றவர்), வசனம் ; சுதாகர் தாஸ், விபின் ராதாகிருஷ்ணன், இணை இயக்கம்: ஜி எம் பாண்டீஸ்வரா, ஒப்பனை ; வினீஸ் ராஜேஷ், புகைப்பட கலைஞர்: சைன் செட்டிங்குலங்கரா, மக்கள் தொடர்பு ; ஏ.ஜான் விளம்பர வடிவமைப்பு: அனந்து அசோகன்

பெருமாள் முருகனின் 'கோடித்துணி' மிகப்பெரிய அளவில் அங்கீகாரங்களையும் பாராட்டுக்களையும் பெற்ற சிறுகதை. இந்தக்கதையை தழுவி எடுக்கப்பட்டுள்ள இந்தப்படம் விரைவில் ரசிகர்களின் பார்வைக்கு வர இருக்கிறது. மேலும் உலக திரைப்பட விழாக்களுக்கு சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 'டாடா' புகழ் கணேஷ் கே பாபு இயக்கும் ஸ்கிரீன் சீன் மீடியா சுந்தர் ஆறுமுகம் தயாரிப்பில் 'ஜெயம் ரவி 34'

சென்னை, 12 அக் 2024: 'இருட்டு', 'தாராள பிரபு', 'எம்ஜிஆர் மகன்', 'இடியட்', 'சாணி காயிதம்', 'அகிலன்' உள்ளிட்ட வெற்றி படங்களையும் 'மத்தகம்' இணைய தொடரையும் தயாரித்துள்ள ஸ்கிரீன் சீன் மீடியா நிறுவனம், வெற்றிப்பட இயக்குநர் எம் ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிப்பில் 'பிரதர்' திரைப்படத்தை பிரம்மாண்ட பொருட்செலவில் தயாரித்துள்ளது. ஜெயம் ரவி, பிரியங்கா மோகன், பூமிகா சாவ்லா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் நடிப்பில் உருவாகியுள்ள 'பிரதர்' திரைப்படம் தீபாவளி அன்று உலகெங்கும் வெளியாகவுள்ள நிலையில் ஸ்க்ரீன் சீன் மீடியா நிறுவனம் ஜெயம் ரவியுடன் மீண்டும் இணைகிறது.

ஸ்கிரீன் சீன் மீடியா நிறுவனத்தின் சார்பில் சுந்தர் ஆறுமுகம் தயாரிப்பில் உருவாகவுள்ள 'ஜெ ஆர் 34' என்று அழைக்கப்படும் ஜெயம் ரவியின் 34-வது படத்தை 'டாடா' வெற்றிப் படத்தை இயக்கிய கணேஷ் கே பாபு இயக்குகிறார். பெரிய பட்ஜெட்டில் இப்படம் உருவாக உள்ளது. 'அகிலன்' மற்றும் 'பிரதர்' படங்களுக்கு பிறகு மூன்றாவது முறையாக ஜெயம் ரவி உடன் ஸ்கிரீன் சீன் நிறுவனம் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 'பிரதர்' திரைப்படத்தில் ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ள பாடல்கள் பெரும் வரவேற்பு பெற்றுள்ள நிலையில் 'ஜெ ஆர் 34' திரைப்படத்திற்காக ஸ்கிரீன் சீன் மீடியா மற்றும் ஜெயம் ரவியுடன் ஹாரிஸ் ஜெயராஜ் மீண்டும் கைகோர்க்கிறார். டிசம்பர் மாதம் படப்பிடிப்பு தொடங்க உள்ள நிலையில் இதில் நடிக்க உள்ள முன்னணி நட்சத்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த தகவல்களை ஸ்கிரீன் சீன் மீடியா நிறுவனம் விரைவில் அறிவிக்கும்.




## ஹம்சவிர்தன் நடிக்கும் அதிரடி சஸ்பென்ஸ் கமர்ஷியல் திரைப்படமான 'மகேஸ்வரா' படப்பிடிப்பில் சண்டைக் காட்சியின் போது விபத்து சிறு காயங்களுடன் ஹம்சவிர்தன் உள்ளிட்டோர் தப்பினர்



சென்னை, 12 அக் 2024: 'புன்னகை தேசம்', 'ஜூனியர் சீனியர்', 'மந்திரன்', 'பிறகு' உள்ளிட்ட திரைப்படங்களில் முதன்மை வேடங்களில் நடித்த ஹம்சவிர்தன் நாயகனாக நடிக்கும் புதிய படமான 'மகேஸ்வரா' முதல் கட்ட படப்பிடிப்பு திருச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நடைபெற்றது. ரெட் டிராகன் எண்டர்டெயின்மென்ட் பேனரில் ஹம்சவிர்தன் தயாரிக்கும் இப்படத்தை மோகன் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'ஹரா' படத்தை இயக்கிய விஜய் ஸ்ரீ ஜி இயக்குகிறார். உயர்ரக சொகுசு பென்ஸ் கார் ஒன்றை நொறுக்கி தரைமட்டமாக்கும் பரபரப்பான சண்டைக் காட்சி அரியலூர் நெடுஞ்சாலையில் முன்னணி ஸ்டண்ட் மாஸ்டர் தினேஷ் சுப்பராயன் தலைமையில் படமாக்கப்படும் போது சற்றும் எதிர்பாராத வகையில் விபத்து ஏற்பட்டது. இதில் சிறு காயங்களுடன் ஹம்சவிர்தன் உள்ளிட்டோர் தப்பினர்.

உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது. ராம்கி, 'கே ஜி எஃப்' புகழ் கருடா ராம், பி எல் தேனப்பன், வேல ராமமூர்த்தி உள்ளிட்டோர் முதல் கட்ட படப்பிடிப்பில் பங்கேற்ற நிலையில், முன்னணி நட்சத்திரங்கள் அடுத்த கட்ட படப்பிடிப்புகளில் கலந்து கொள்கின்றனர். சஸ்பென்ஸ் கலந்த அதிரடி கமர்ஷியல் திரைப்படமாக உருவாக உள்ள 'மகேஸ்வரா' படப்பிடிப்பு ரஷ்யா, பொலிவியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் திட்டமிடப்பட்டுள்ளது. இப்படத்திற்கு மோகன் குமார் ஒளிப்பதிவு செய்ய ரஷாந்த் ஆர்வின் இசையமைக்கிறார். மக்கள் தொடர்பு பணிகளை நிகில் முருகன் கவனிக்கிறார். இதுவரை ஏற்றிராத முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் 'மகேஸ்வரா' திரைப்படத்தில் ஹம்சவிர்தன் நடிக்கிறார். அதிக பொருட்செலவில், விறுவிறுப்பான கதைக்களத்தில் உருவாகி வரும் இந்த திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவரும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

## ஏ ஆர் என்டர்டைன்மென்ட் தயாரிப்பில் லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் நவீன் சந்திரா, ரியா ஹரி நடிப்பில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகும் விறுவிறுப்பான புலனாய்வு திரில்லர் 'லெவன்' திரைப்படத்தின் முதல் பாடலை உலக நாயகன் கமல் ஹாசன் வெளியிட்டார்



சென்னை, 12 அக் 2024: தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகும் விறுவிறுப்பான புலனாய்வு திரில்லர் 'லெவன்' திரைப்படத்தின் முதல் பாடலை உலக நாயகன் கமல் ஹாசன் இன்று வெளியிட்டார். டி. இமான் இசையில் ஷ்ருதி ஹாசன் பாடியுள்ள 'தி டெவில் இஸ் வெயிட்டிங்' எனும் இப்பாடலின் வரிகளை முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் திரைப்படத்தின் இயக்குநர் லோகேஷ் அஜில்ஸ் எழுதியுள்ளார். முன்னணி இசை நிறுவனமான சரிகம இப்பாடலை வெளியிட்டுள்ளது.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' மற்றும் 'செம்பி' ஆகிய பெரிதும் பாராட்டப்பட்ட வெற்றி படங்களை தொடர்ந்து விறுவிறுப்பான புலனாய்வு திரில்லரான 'லெவன்' திரைப்படத்தை தங்களது மூன்றாவது படைப்பாக ஏ ஆர் என்டர்டைன்மென்ட் நிறுவனத்தின் சார்பில் அஜ்மல் கான் மற்றும் ரியா ஹரி தயாரிக்கின்றனர்.

இயக்குநர் சுந்தர் சி இடம் 'கலகலப்பு 2', 'வந்தா ராஜாவா தான் வருவேன், மற்றும் 'ஆக்ஷன்' ஆகிய திரைப்படங்களில் இணை இயக்குநராக பணியாற்றிய லோகேஷ் அஜில்ஸ் இந்த திரைப்படத்தை இயக்குகிறார்.

முதல் பாடலான 'தி டெவில் இஸ் வெயிட்டிங்' குறித்து பேசிய இயக்குநர், "உற்சாகம் மிகுந்த இந்த பாடல் உயர்தரத்தில் முழுக்க ஆங்கிலத்தில் உருவாகியுள்ளது. டி. இமானின் இசையும் ஷ்ருதி ஹாசனின் குரல் வளமும் பாடலுக்கு மிகப்பெரிய பலமாகும். நாயகன் மற்றும் வில்லனைக் குறித்த பாடலாக இது அமைந்துள்ளது. இந்த பாடல் ரசிகர்களிடையே மிகப்பெரிய வரவேற்பு பெற்று திரைப்படம் குறித்த எதிர்பார்ப்பை உருவாக்கும் என்று நம்புகிறோம்," என்றார்.

தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகி வரும் இத்திரைப்படத்தில் நவீன் சந்திரா நாயகனாக நடிக்கிறார். 'ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்', 'இன்ஸ்பெக்டர் ரிஷி' இணையத் தொடர், 'சரபம்', 'சிவப்பு' மற்றும் சசிகுமாரின் 'பிரம்மன்' உள்ளிட்டவற்றில் நடித்துள்ள இவர், ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் நடிக்கும் 'கேம் சேஞ்சர்' திரைப்படத்தில் எதிர் நாயகனாக தற்போது நடித்து வருகிறார்.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தில் நடித்துள்ள ரியா ஹரி நாயகியாக நடிக்கும் இப்படத்தில் 'விருமாண்டி' புகழ் அபிராமி, ஆடுகளம் நரேன், 'வத்திக்குச்சி' புகழ் திலீபன், 'மெட்ராஸ்' புகழ் ரித்விகா, அர்ஜை உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கான இசையை டி. இமான் அமைக்க, பாலிவுட்டில் பணியாற்றிய அனுபவமுள்ள கார்த்திக் அசோகன் ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார். படத்தொகுப்புக்கு தேசிய விருது பெற்ற ஸ்ரீகாந்த் என்.பி. பொறுப்பேற்றுள்ளார்.

'லெவன்' திரைப்படம் குறித்த மேலும் தகவல்களை பகிர்ந்து கொண்ட இயக்குநர் லோகேஷ் அஜில்ஸ், "ஆரம்பம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டு வரும் விறுவிறுப்பான புலனாய்வு திரில்லராக 'லெவன்' அமையும். திறமைமிக்க நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் இப்படத்திற்காக இணைந்துள்ளார்கள். அனைவரையும் கவரும் விதத்தில் திரைப்படம் அமையும் என்று நம்புகிறேன்," என்று கூறினார்.

ஏ ஆர் என்டர்டைன்மென்ட் பேனரில் அஜ்மல் கான் மற்றும் ரியா ஹரி தயாரிப்பில் லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் நவீன் சந்திரா நடிப்பில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகும் திரைப்படமான 'லெவன்' படத்தை நவம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

## இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேறி வருகிறது: ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பெருமிதம்



சென்னை, 12 அக் 2024: இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேறி வருகிறது என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

ஆர்.எஸ்.எஸ்., 100வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும், இந்த ஆண்டு நமக்கு முக்கியமானது. நமது நாடு தொழில்நுட்பம் மற்றும் கல்வித் துறைகளில் முன்னேறி வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூரில் விஜயதசமியை முன்னிட்டு, ஆர்.எஸ்.எஸ்., நடத்திய நிகழ்ச்சியில் தலைவர் மோகன் பகவத் மற்றும் இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், மோகன் பகவத் பேசியதாவது: ஆர்.எஸ்.எஸ்., 100வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த ஆண்டு முக்கியமானது. மக்களின் குணநலன்களை பொறுத்து ஒரு நாடு மகத்தானதாக மாறுகிறது.

இஸ்ரேல் ஹமாஸ் போர் கவலை அளிக்கிறது. இதனால் அண்டை நாடுகளுக்கு என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அனைவரும் கவலைப்படுகிறார்கள். நமது அண்டை நாடான வங்கதேசத்தில் என்ன நடந்தது? அதற்கு சில உடனடி காரணங்கள் இருக்கலாம்,

இந்துக்கள் மட்டுமல்ல, அனைத்து சிறுபான்மையினரும் ஆபத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு உதவ வேண்டும். நாம் எங்கிருந்தாலும் அட்டூழியத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். சூழ்நிலைகள் சில சமயங்களில் சவாலாகவும், சில சமயங்களில் நல்லதாகவும் இருக்கும். மனித வாழ்க்கை முன்பை விட பொருள் ரீதியாக மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் பல போராட்டங்கள் தொடர்வதை நாம் காண்கிறோம்.

கடந்த சில ஆண்டுகளாக, உலக அளவில் இந்தியா வலிமையான நாடாக மாறி வருகிறது. இந்தியாவின் கவுரவமும், புகழும் உலகளவில் அதிகரித்துள்ளது. நமது நாடு தொழில்நுட்பம் மற்றும் கல்வித் துறைகளில் முன்னேறி வருகிறது. இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேறி வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

## ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கல் அக்டோபர் 15, 2024 அன்று திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

சென்னை, 12 அக் 2024: கிரிஸில் அறிக்கையின்படி, சிஒய்2023 இல் பயணிகள் வாகன விற்பனையின் அடிப்படையில், உலகின் மூன்றாவது பெரிய ஆட்டோ ஓஈஎம் ஆன ஹூண்டாய் மோட்டார் குழுமத்தின் ஒரு அங்கமான ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் ("கம்பெனி") நிறுவனம், அக்டோபர் 15, 2024 செவ்வாய் அன்று அதன் ஈக்விட்டி பங்குகளின் ஆரம்பப் பொது வழங்கலை ("ஆபர்") திறக்க முன்மொழிகிறது. ஆங்கர் முதலீட்டாளர் ஏல தேதியானது, ஏலம்/வழங்கல் திறக்கும் தேதிக்கு முந்தைய ஒரு வேலை நாளான திங்கட்கிழமை, அக்டோபர் 14, 2024 ஆகும். ஏலம்/வழங்கல் முடிவுறும் தேதி வியாழன், அக்டோபர் 17, 2024.

இந்த வழங்கலின் விலை வரம்பு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ. 1,865லிருந்து ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ. 1,960 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு குறைந்தபட்ச 7 ஈக்விட்டி பங்குகள் மற்றும் 7 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளுக்கு ஏலம் எடுக்கப்படலாம்.

ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் (தி ப்ரொமோட்டர் செல்லிங் சேரோல்டர்") மூலம் செய்யப்படும் 142,194,700 வரையிலான ஈக்விட்டி பங்குகளுக்கான ஒரு விற்பனைக்கான வழங்கலை இந்த நிறுவனத்தின் ஆரம்ப பொது வழங்கல் கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் இந்த வழங்கலிலிருந்து எந்த வருமானத்தையும் பெறாது (தி ஆபர் ப்ரோசீட்ஸ்").

செபி ஐ சி டி ஆர் ஒழுங்குமுறைகளின் 31வது விதியுடன் படிக்கப்பட்ட, திருத்தப்பட்ட ("எஸ் சி ஆர் ஆர்") 1957 ஆம் ஆண்டின் பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகளின் விதி 19(2)(பி) இன் அடிப்படையில் இந்த வழங்கல் வழங்கப்படுகிறது. செபி ஐ சி டி ஆர் விதிமுறைகளின் விதிமுறை 6(1) இன் படி புத்தக உருவாக்க செயல்முறை மூலம் இந்த வழங்கல் வழங்கப்படுகிறது, இதில் 50% க்கும் குறைவான நிகர வழங்கலானது தகுதிவாய்ந்த நிறுவன வாங்குபவர்களுக்கு ("க்யூ ஐ பி எஸ்") ஒரு விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படும். ("க்யூ ஐ பி பகுதி"), இருப்பினும் எங்கள் நிறுவனம் பி ஆர் எல் எம்களுடன் கலந்தாலோசித்து க்யூ ஐ பி பகுதியின் 60% வரை ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கலாம் மற்றும் அத்தகைய ஒதுக்கீட்டின் அடிப்படையானது செபி ஐ சி டி ஆர் விதிமுறைகளின்படி ("ஆங்கர் முதலீட்டாளர் பகுதி") பி ஆர் எல் எம்களுடன் கலந்தாலோசித்து எங்கள் நிறுவனத்தின் விருப்பத்தின் அடிப்படையில் இருக்கும், இதில் மூன்றில் ஒரு பங்கு, ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் விலைக்கு அல்லது அதற்கு மேல் உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளிலிருந்து பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு ("ஆங்கர் முதலீட்டாளர் ஒதுக்கீடு விலை") உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளுக்கு ஒதுக்கப்படும். ஆங்கர் முதலீட்டாளர் பகுதியில் குறைவான சந்தா அல்லது ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால், மீதமுள்ள ஈக்விட்டி பங்குகள் கியூ ஐ பி பகுதியில் (ஆங்கர் முதலீட்டாளர் பகுதியைத் தவிர) ("நிகர க்யூ ஐ பி பகுதி") சேர்க்கப்படும். மேலும், நிகர கியூ ஐ பி பகுதியின் 5% மியூச்சுவல் ஃபண்டுகளுக்கு மட்டுமே ஒரு விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கப்படும், மேலும் நிகர கியூ ஐ பி பகுதியின் எஞ்சிய பகுதியானது வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, மியூச்சுவல் ஃபண்டுகள் உட்பட, அனைத்து கியூ ஐ பிகளுக்கும் (ஆங்கர் முதலீட்டாளர்களைத் தவிர) ஒரு விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும். மேலும், வழங்கல் விலை அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, தகுதியான ஊழியர்களுக்கு ஒதுக்குவதற்கு,மொத்தமாக ரூ. 75 மில்லியன் வரையிலான [•] ஈக்விட்டி பங்குகள் கிடைக்கும்.

மேலும், நிகர வழங்கலில் அதிகபட்சமாக 15%, நிறுவனம் அல்லாத முதலீட்டாளர்களுக்கு ("நிறுவனம் அல்லாத வகை") ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும், அதில் மூன்றில் ஒரு பங்கு நிறுவனம் அல்லாத வகையிலான ஏலதாரர்களுக்கு ரூ. 200,000 க்கும் அதிகமான மற்றும் ரூ. 1,000,000 வரை விண்ணப்ப அளவுடன் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும். மற்றும் நிறுவன அல்லாத வகையின் மூன்றில் இரண்டு பங்கு, ரூ. 1,000,000 க்கும் அதிகமான விண்ணப்ப அளவைக்கொண்ட ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும் மற்றும் செபி ஐ சி டி ஆர் விதிமுறைகளுக்கு இணங்க, நிறுவனம் அல்லாத வகையின் பிரிவுகள், வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்பட்ட செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, நிறுவனம் அல்லாத வகையின் இந்த இரண்டு துணைப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் கீழ்-சந்தாவை நிறுவனம் அல்லாத வகையின் மற்ற துணை வகைகளில் உள்ள ஏலதாரர்களுக்கு ஒதுக்கப்படலாம். மேலும், செபி ஐ சி டி ஆர் விதிமுறைகளுக்கு இணங்க, வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் அவர்களிடமிருந்து பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, சில்லறை தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு ("ரீடெய்ல் கேட்டகிரி") நிகர வழங்கலில் 35% க்குக் குறையாமல் ஒதுக்கீடு செய்ய கிடைக்கும். மேலும், ஊழியர் ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் தகுதியுள்ள ஊழியர்களுக்கு வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் அவர்களிடமிருந்து பெறப்பட்ட செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, ஒரு விகிதாச்சார அடிப்படையில் ஈக்விட்டி பங்குகள் ஒதுக்கப்படும். அனைத்து ஏலதாரர்களும் (ஆங்கர் முதலீட்டாளர்கள் தவிர) தடுக்கப்பட்ட தொகை ("ஏ எஸ் பி ஏ") செயல்முறை மூலம் ஆதரிக்கப்படும் விண்ணப்பத்தின் மூலம் இந்த வழங்கலில் கட்டாயமாக பங்கேற்கவேண்டும், மற்றும் யூ பி ஐ ஏலதாரர்களின் விஷயத்தில் (யூ பி ஐ ஐடி (இனிமேல் வரையறுக்கப்பட்டுள்ளது) உட்பட) அந்தந்த வங்கிக் கணக்கின் விவரங்களை வழங்க வேண்டும் (இனிமேல் வரையறுக்கப்பட்டுள்ளது) இதில் பொருந்தக்கூடிய வகையில் சுய சான்றளிக்கப்பட்ட சிண்டிகேட் வங்கிகளால் ("எஸ் சி பி-கள்") அல்லது ஸ்பான்சர் வங்கிகளால் ஏலத்தொகை தடுக்கப்படும். ஏ எஸ் பி ஏ செயல்முறையின் மூலம் ஆங்கர் முதலீட்டாளர்கள்பங்குக்கு பங்கேற்பதற்கு ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு அனுமதி இல்லை.

எங்கள் நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகள் பிஎஸ்இ லிமிடெட் ("பி எஸ் ஈ") மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ("என் எஸ் ஈ", பி எஸ் ஈ உடன் இணைந்து, தி ஸ்டாக் எக்ஸேன்சஸ்") ஆகியவற்றில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளது.

கோடக் மஹிந்திரா கேபிடல் கம்பெனி லிமிடெட், சிட்டிகுரூப் குளோபல் மார்க்கெட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், எச் எஸ் பி சி செக்யூரிட்டீஸ் அண்ட் கேபிடல் மார்க்கெட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஜே.பி. மோர்கன் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் மோர்கன் ஸ்டான்லி இந்தியா கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஆகியவை இந்த வழங்கலுக்கு புக் ரன்னிங் லீட் மேலாளர்களாவர் ("பி ஆர் எல் எம்-கள்").

## விட்டல்ஸ் மெடிகேர் நிறுவனத்தில் 51% பங்கை வாங்க டெர்ம் ஷீட்டை செயலாக்கம் செய்திருக்கும் எவெக்ஸியா லைஃப்கேர் லிமிடெட்

சென்னை, 12 அக் 2024: வேதிப்பொருட்களில் வர்த்தகம், இன்டர்மீடியட் பொருட்களின் உற்பத்தி, வேளாண் விளைபொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்களின் வர்த்தகம் ஆகியவற்றில் ஈடுபட்டு வரும் முன்னணி நிறுவனமான எவெக்ஸியா லைஃப்கேர் லிமிடெட், ரூ.35 கோடிக்கு விட்டல்ஸ் மெடிகேர் பிரைவேட் லிமிடெட் - ன் 51% பங்கை வாங்குவதற்கான டெர்ம் ஷீட் நடவடிக்கையை செய்து முடித்திருப்பதாக இன்று அறிவித்திருக்கிறது. இந்த டெர்ம் ஷீட் ஆவணத்தில் விவரணை செய்யப்பட்டவாறு இதற்கான ஒட்டுமொத்த பரிவர்த்தனையும் நிறைவடைந்த பிறகு எவெக்ஸியா லைஃப்கேர் லிமிடெட் - ன் ஒரு துணை நிறுவனமாக விட்டல்ஸ் மெடிகேர் பிரைவேட் லிமிடெட் மாறும். விட்டல்ஸ் மெடிகேர், நோயறிதல் சோதனைகளுக்கான டயக்னாஸ்டிக் சென்டர்களை நடத்தி வருகிறது. ஆகவே, பிசினஸ் வளர்ச்சிக்காக கூட்டு முயற்சி ஆற்றலில் உருவாகும் வாய்ப்புகளை திறம்பட பயன்படுத்தி ஆதாயம் அடைவது என்ற குறிக்கோளின் அடிப்படையில் இந்த கையகப்படுத்தல் நடவடிக்கை அமைந்திருக்கிறது. இதற்கும் கூடுதலாக, தனது பிசினஸ் செயல்பாடுகளின் விரிவாக்கத்திற்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 10 எல் எல் சி-கள்/ நிறுவனங்களில் ஒரு முதலீட்டாளராக எவெக்ஸியா லைஃப்கேர் - ன் துணை நிறுவனம் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முதலீட்டு நோக்கத்திற்காக குறிப்பிட்ட இந்த எல் எல் சி நிறுவனங்களின் தற்போதைய பார்ட்னர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருந்தக்கூடிய சட்டங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட கடப்பாடு நிறுவன (எல்எல்சி) வடிவத்தில் ஒரு எஸ் பி வி நிறுவனத்தை உருவாக்கிப் பதிவு செய்ய வேண்டும் மற்றும் இந்த பரிவர்த்தனையின் ஒரு பகுதியாக, இந்த அனைத்து எல்எல்சிகளிலும் உள்ள தங்களது பங்குகளை ஒரு மாற்று கை செயல்பாட்டின் மூலம் மாற்றிக்கொள்வதும் அவசியம். இதன்மூலம் எஸ்பிவி நிறுவனத்தின் பங்குதாரர்களாக / பார்ட்னர்களாக அதன் 100 சதவிகித மூலதனத்தைக் கொண்டிருப்பவைகளாக அவைகள் மாறும். மூலதன பங்களிப்பின் பேரில் தொடங்கப்படும் புதிய எஸ்பிவி - ன் மூலதனத்தில் எவெக்ஸியா லைஃப்கேர் ஆஃப்ரிக்கா லிமிடெட், 51% பங்கினை கொண்டிருக்கும் மற்றும் ஏற்கனவே இருந்து வரும் பார்ட்னர்கள் அந்த எஸ்பிவி - ல் 49% பங்கினை வைத்திருப்பார்கள். எவெக்ஸியாவின் துணை நிறுவனமான எவெக்ஸியா லைஃப்கேர் ஆஃப்ரிக்கா லிமிடெட், ஒட்டுமொத்த பரிவர்த்தனை நிறைவடையும் செயல்பாட்டிற்கு உட்பட்டு, ஒரு முதலீடாகவும் மற்றும் எஸ்பிவிக்கு மூலதன பங்களிப்பாகவும் மொத்தத்தில் ரூ.190 கோடியை வழங்க திட்டமிட்டுள்ளது. சமீபத்தில், 24 கோடி மாற்றத்தக்க வாரண்ட்களை ஒரு வாரண்ட்டுக்கு ரூ. 3.60/- என்ற விலையில் முன்னுரிமை வெளியீடு வழிமுறையில் வெளியிடும் முன்வரைவு திட்டத்திற்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது என்பதனை அறிவித்திருக்கிறது. இதன் மூலம் மொத்தத்தில் ரூ. 86.40 கோடி மூலதன நிதியைத் திரட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. நிறுவனத்தின் உறுப்பினர்களின் ஒப்புதல் மற்றும் பிற சட்டப்பூர்வ மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இந்த வாரண்ட்கள் வெளியீடு இருக்கும்.

## ஹெராயின், கைத்துப்பாக்கிகளுடன் எல்லையில் பறந்த பாகிஸ்தான் ட்ரோன்: பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினர்



சென்னை, 12 அக் 2024: பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூரில், ஹெராயின், கைத்துப்பாக்கிகளை ஏற்றிச் சென்ற பாகிஸ்தான் ட்ரோனை எல்லை பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினர்.

பஞ்சாபின் பெரோஸ்பூரில், பாகிஸ்தானுக்கு சொந்தமான, ட்ரோன் ஒன்று வானில் பறந்து கொண்டிருந்தது. இதனை கவனித்த பாதுகாப்பு படையினர் ட்ரோனை சுட்டு வீழ்த்தினர். அதில் இருந்து 500 கிராம் ஹெராயின் மற்றும் கைத்துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில், சுட்டுவீழ்த்தப்பட்ட ட்ரோன், ஹெராயின் மற்றும் கைத்துப்பாக்கி படத்தை பி.எஸ்.எப்., சமூகவலைதளத்தில் பகிர்ந்து, 'சீனாவில் தயாரிக்கப்பட்ட டிஜெஐ மேவிக் 3 கிளாசிக் ரக ட்ரோனை பி.எஸ்.எப்., வீரர்கள் தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்தி சுட்டு வீழ்த்தினர்' என குறிப்பிட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக, பஞ்சாபில் பல பாகிஸ்தான் ட்ரோன்களை பி.எஸ்.எப்., படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர். மார்ச் மாதம் அமிர்தசரஸ் அருகே பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட இரண்டு ட்ரோன்களை பஞ்சாப் போலீசார் பறிமுதல் செய்தனர்.

பிப்ரவரி மாதம், குர்தாஸ்பூர் மாவட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் எல்லை அருகே சீனாவில் தயாரிக்கப்பட்ட மற்றொரு ஆளில்லா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

## 10, 11, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு அட்டவணை 14-ந்தேதி வெளியீடு

சென்னை, 12 அக் 2024: 10, 11 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு அட்டவணையை நாளை மறுநாள் (14 ந்தேதி) அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிடுகிறார்.

தமிழகத்தில் 10, 11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கு நடப்பு (2024 25) கல்வியாண்டுக்கான பொதுத் தேர்வு மார்ச் ஏப்ரல் மாதங்களில் நடைபெறும்.

பள்ளிக்கல்வித் துறை வெளியிட்ட அறிவிப்பில், 'தமிழ்நாடு முதல்வர், துணை முதல்வர் ஆகியோருடன் மேற்கொண்ட ஆலோசனையின்பேரிலும், அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோயம்புத்தூரில் நாளை மறுநாள் (14 ந்தேதி) 10, 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு அட்டவணையை வெளியிட உள்ளார் எனத் தெரிவித்துள்ளது.